**நாஉல பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**
**-----------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 மே 04 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 31 ஆந் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாவுல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வ அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஒப்பந்தங்கள் ரத்துச் செய்யப்பட்டிருந்த ரூபா 821,907 தொகை பெறுமதியான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் 2 இன் பெறுமதிகள் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கு மீதிகள் சீர்செய்யப்பட வேண்டும் | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன் |
| (ஆ) | ரூபா 9,010,102 தொகை பெறுமதியான மூலதனச் செலவானது, மீண்டெழும் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மூலதனச் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும் | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன் மீண்டெழும் தன்மையிலான நிதிஏற்பாடுகளைக் கொண்டு வீதி திருத்தியமைக்கப்பட்டது. |
| (இ) | ரூபா 10,275,000 ஆன மூலதன நிதி உதவி வருமான உதவிகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | மூலதனச் மானியங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும் | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன் மீண்டெழும் தன்மையிலான நிதிஏற்பாடுகளைக் கொண்டு வீதி திருத்தியமைக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,939,211 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன் 2020 கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுக்கின்றேன் |
| (உ) | மீளாய்வாண்டிற்கு உரிய கணக்காய்வுக் கட்டணங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | 2020 கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுக்கின்றேன் |
| (ஊ) | 2018 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 26,875 நீதிமன்றத் தண்டப் பணத் தொகை கடன்பட்டோரின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | 2020 கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுக்கின்றேன் |

### 1.3.2 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

---

(அ) கிடைக்க வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளுக்கும் அதிகமான காலத்தைத் தாண்டிய கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகள் 06 இன் கூட்டுப் பெறுமதி ரூபா 669,633 ஆக இருந்தது. | கிடைக்க வேண்டிய வருமானங்கள் மற்றும் பணத் தொகைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். வருங்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வ அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலத்துக்குள் காணப்பட்ட செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 825,147 ஆக இருந்தது | செலுத்தப்பட வேண்டிய பணத் தொகைகள் உரிய நேரத்தில் செலுத்தப்படல் வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். |

**1.3.3 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வ அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1993 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கு உரியதாக கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 957,380 தொகை பெறுமதியான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்களை பௌதீக ரீதியில் காணப்பட வில்லை | இப் பொருட்களை பௌதீக ரீதியில் அடையாளம் கண்டு கணக்கெடுப்பை மேற்கொள்ளல் வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். வருங்காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் பொருட்கள் கணக்கெடுப்பை மேற்கொள்கிறேன். |

**1.4. இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- | --- |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு | - | சபைக்குரிய வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் பெயர்பட்டியல் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | சபைக்குரி ய வீதிகள் நாளதுவை ர யாக்கப்பட வேண்டும். | எதிர்காலத’தில் நிதி நிலைமை அடிப்படையில் நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி<br>விதி 218 | 29,361,722 | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிரு க்ககவில்லை. | சட்ட விதிகளுக் கு இணங்க செயற்பட வேண்டும். | எதிர்காலத்தல் கணிப்பீட்டை மேறகொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | 2015 மே 15 ஆம் திகதிய 1914/40 ஆம் இலக்க இலங்கை சனறாயக சோஷலிசக் குடியரசின் விசேட வர்த்தமானி விதிகள் | 300,000 | முறையான அனுமதயின்றி சபை கூட்டங்களுக்கு வருகை தராத 10 உறுப்பினர்களுக்கு மாதாந்த படிகள் வழங்கப்பட்டிருந்தன | அங்கத்தவ ர் வருகை தராமை எழுத்து மூலம அறிவிக்க வேண்டும் | பொது சபையின் தலைவரின் விசேட அறிவித்தல் மூலம் வருகை தராமை அறிவிக்கப்பட்டிருந்த து. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,703,627 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,372,332 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமானம் | 2019 மதிப்பிடப் பட்ட வருமானம் | 2019 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,787,000 | 1,621,549 | 1,339,277 | 2,416,814 | 1,787,000 | 1,655,539 | 1,488,253 | 1,571,488 |
| (ii) | வாடகை | 3,280,000 | 1.086,700 | 2,543,305 | 427,375 | 2,010,000 | 892,000 | 2,182,720 | 287,295 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,060,175 | - | 1,129,565 | - | 1,010,500 | - | 1,143,740 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 13,509,000 | 978,730 | 8,504,773 | 4,595,523 | 15,253,000 | 881,046 | 6,159,743 | 4,117,463 |
| | மொத்தம் | 19,636,175 | 3,686,979 | 13,516,920 | 7,439,712 | 20,060,500 | 3,428,585 | 10,974,456 | 5,976,246 |

### 2.2.2 கடை வாடகை

| | கணக்காய்வ அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதியின் இலக்கம் 2016/3 உடைய மத்திய மாகாண, உள்ளூராட்சி ஆணையரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 33 கடைகளுக்கு 2013 இன் பின்னர் கு பெறுமதி மதிப்பிடப்பட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வருங்காலத்தில் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | கடை வாடகை ஒப்பந்தத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் உப குத்தகைக்கு விடப்பட முடியாது எனினும், 11 கடைகள் உப குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. | ஒப்பந்தப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மீளவும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவது பிரயோக ரீதியில் சிரமமானது என்பதோடு, இது தொடர்பாக வருங்காலத்தில் விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | வாரச் சந்தை கடை இலக்கம் 10 எனப் பெயரிடப்பட்டிருந்த கட்டிடத்தில் அனுமதியற்று நீண்ட காலமாக வெளியாட்கள் தமது குடியிருப்பாகப் பாவித்துக் கொண்டிருந்ததோடு, அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 82,640 ஆக இருந்தது. | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளடமிருந்தும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 607,910 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா 4,671,341 ஆகவும் இருந்தது. | பெறவேண்டிய வருமானங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் பெறவேண்டிய வருமானங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) எதிர்பார்த்த விளைவு மட்டத்தைப் பெற்றுக் கொள்ளாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீண்டெழும் வருமானத்தின் 30% ஆவது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும் எனினும், மீளாய்வாண்டில் 03 கைத்தொழில்களுக்காக ரூபா 900,000 தொகை மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்தது. | மீண்டெழும் வருமானம் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும். | வருங்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி *NP/SP/SDG/17* ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள ரூபா 70,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும உரிய இலக்கை இனங்கண்டு முறையான திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இணங்கண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிலிருந்து உரிய விடயங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வ அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படாதிருந்த காரணத்தால் சபைக்குரிய காணியின் நபரொருவர் அனுமதியற்று குடியேறி இருந்தார். | அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பிரதேச செயலாளரிடம் அறியத் தரப்பட்டுள்ளது. |
| (ஆ) கடந்த 03 ஆண்டு காலப் பகுதிக்குள் கட்டிட அபிவிருத்தி விண்ணப்பப்படிவங்கள் 194 கிடைக்கப் பெற்று அவற்றுள் 139 இற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தன. அக் காலப் பகுதிக்கு உரிய 122 இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ்களை வழங்கவும் அனுமதியளிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் குறித்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இணக்கச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளாத தரப்பினருக்கு கடிதங்கள் மூலம் அறியத் தரப்பட்டுள்ளது. |
| (இ) 2006 ஆம் ஆண்டு துண்டு பிரிக்கப்பட்டு விற்கப்பட்டதில் சபைக்கென ஒதுக்கப் பட்டிருந்த 34.42 பேர்ச் காணியை சட்டபூர்வமாக உரித்தாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியை சட்டபூர்வமாக உரித்தாக்கிக் பொறுப்பேற்ன வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். இது தொடர்பாக வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இட மாற்றம் பெற்றுச் சென்ற 6 உத்தியோகத்தர்களின் பிணை வைப்புத் தொகையான ரூபா 31,022 தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இட மாற்றம் பெற்றுச் சென்ற அகளின் பாதுகாப்பு வைப்புத் தொகைகள் விடுவிக்கப்படல் வேண்டும். | வருங்காலத்தில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (உ) | 2012 ஆம் ஆண்டிலிருந்து முன் கொண்டு வரப்படும் இலங்கைக் காப்புறுதித் திணைக்களத்திடமிருந்து ஈடு செய்யப்படாத ரூபா 152,199 தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது. | அறவிடப்பட வேண்டிய தொகை அறவிடப்பட வேண்டும் என்பதோடு, உரிய ஆவணக் கோப்புகள் காணப்படவில்லை என்றால் அதைக் குறித்த விசாரணை நடத்தப்படல் வேண்டும். | இதற்குரிய ஆவணக் கோப்பு சபையில் காணப்படவில்லை என்பதால் ஆலோசனை கேட்டு கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. |
| (ஊ) | ஹபரகஹமட பிரதேசத்தில் இடம்பெற்ற காணி ஏல விற்பனை மூலமாக பொது வேலைகளுக்காகத் தரப்பட வேண்டிய 28.88 பேர்ச் அளவான காணிக்கான ரூபா 1,039,680 தொகையை காணி ஏல விற்பனையாளரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கப் பெற வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிய தொகையைச் செலுத்துமாறு ஏல விற்பனைதாரருக்கு அறியத் தரப்பட்டுள்ளது. |

3.3 **மனித வள முகாமை**

-----------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து நீக்கப்பட்ட சபை செயலாளரிடமிருந்து ரூபா 199,920 ஆன கடன் மீதியொனறு அறவிடப்பட வேண்டியிருந்தது | கடனை அறவடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஓய்வுதூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு உள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஹாடுவை நீர் வினியோகத் திட்டம் மற்றும் 2016 ஆம் ஆண்டில் ரூபா 2,500,000 செலவழித்து நிர்மாணிக்கப்பட்ட சேனாகம கினிஹிர கந்த நீர் வினியோகத் திட்டம் ஆகியவை செயலிழந்து காணப்பட்டன. | பொது மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய இயலுமான வழிகளைத் தேடிப் பார்த்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | நீண்ட காலமாகக் காணப்படும் கோடையின் தாக்கம் காரணமாக செயலிழந்து போயுள்ளது. |

**3.5 சொத்துக்கள் நிர்வாகம்**

**3.5.1 விளைவற்ற / குறைப் பயன்பாட்டிலான சொத்துக்கள்**

| கணக்காய்வ அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 7,967,144 தொகை பெறுமதியான Single drum vibrating இயந்திரமானது 2017 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டது. | தேவையுள்ள வேறொரு நிறுவனமொன்றுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை. |

**3.5.2 வாகன பயன்பாடு**

| கணக்காய்வ அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) தலைவர் பயன்படுத்தும் கெப் ரக வாகனம் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரை 34624 கிலோ மீற்றர்கள் தூரம் பயணித்ததற்கான 4263 லீற்றர் எரிபொருள் செலவாக ரூபா 440,033 தொகை பெறுமதிக்கு உரிய பயணங்களுக்கான சரியர்தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | உத்தியோகபூர்வ தேவைகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். | பயணித்த நேரங்கள் எழுதி வைக்கப்படாமையால் தெளிவின்மை உள்ளது குறித்து சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வாகனத்தைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர் சான்று படுத்தாமல் சபையின் 12 வாகனங்களை 2226 கிலோ மீற்றர் தூரமும், இயந்திரங்களை 139 மணித்தியாலங்களும் பயன்படுத்தி 714 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 74,797 செலவழிக்கப்பட்டிருந்தது. | சான்று படுத்தப்படாத பயணங்களுக்காக செலவழிக்கப்பட்ட எரிபொருள் செலவுகள் குறித்து கவனம் செலுத்தப்படல் வேண்டும். | தவறுதலாக பயணக் குறிப்புகளை சான்று படுத்த இயலாமல் போயுள்ளது. |

3.6 **முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

--------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 951,208 தொகை முறையான அங்கீகாரமன்றி கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சபை அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

3.7 **இனங்காணப்பட்ட நட்டங்கள்**

--------------------------------

| **கணக்காய்வ அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி JCB இயந்திரத்தில் ஏற்பட்ட விபத்து தொடர்பாக நி.பி 104(3) மற்றும் (4) இன் பிரகாரம் உரிய முறையான விசாரணை மேற்கொண்டு ஏற்பட்ட நட்டமான ரூபா 118,250 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பானவர்கள் இனங்காணப்பட்டு நட்டத் தொகை அறவிடப்படல் வேண்டும். | முதற்கட்ட விசாரணையின் போது விபத்துக்குப் பொறுப்பானவர்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை என்று அறியத் தரப்பட்டுள்ளதனால், உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

## 3.8 பெறுகை

### ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வ அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புதிய அலுவலகக் கட்டிடத்தில் அறைகளை வேறு பிரித்தல் - ரூபா 2,185,181 | | |
| (i) | நிர்மாணிக்க ஒப்படைக்கப்பட்டதன் பிறகு மீண்டும் பணிகளுக்காக ரூபா 2,494,503 பெறுமதியான பணி மதிப்பீடு தயாரிக்கப் பட்டிருந்ததுடன் அது பொறியியலாளர் ஒருவரால் சான்றுறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பொறியியலாளர் ஒருவரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். | சேவைத் திட்டமாகக் கருதி பொறியியலாளர் ஒருவரின் பரிந்துரையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விலை மனுக் கோரும்போது வழங்குநர்களுக்கு வழங்கப்படும் ஒப்பந்தக் கடித ஆவணங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தயாரிக்கப்படாத மூன்று பொருட்களை மாத்திரமே உள்ளடக்கிய மதிப்பீடொன்று வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தயாரிக்கப்படாத மதிப்பீட்டிற்கு மனுக்களை சமர்ப்பித்திருந்த வழங்குநரிடமிருந்து ரூபா 2,017,200 விலை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழங்குநரின் மதிப்பீட்டுக்கு ஏற்ப தொழில் சார்ந்ததொழில்நுட்ப உத்தியோகத்தர் மீண்டும் ரூபா 2,097,880 தொகைக்கு மதிப்பீடொன்றை சமர்ப்பித்திருந்தார். | பெறுகைச் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | சேவை வழங்கலாகக் கருதப்பட்டு விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | வழங்குநரின் விலை மனுக்களுக்கு ஏற்ப அறைகளை வேறுபடுத்திய வேளையில் மேலே 4.6 மில்லிமீற்றர் கண்ணாடி மற்றும் கீழே க்ளெடின் தகடு ஆகியவற்றை இட்டு நிர்மாணிக்க ஒரு சதுர அடிக்கு ரூபா 1,400 தொகை கோரியிருந்த போதிலும், மேலேயும் கீழேயும் க்ளெடின் தகடுகளோடு மத்தியில் கண்ணாடி, மற்றும் மேலே கண்ணாடி, கீழே க்ளெடின் தகடு, மற்றும் முழுமையாக க்ளெடின் தகடு மாத்திரம் என 3 விதமாக அறைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் கோரியிருந்த விலையே செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பணம் செலுத்தியதால் சபை நிதிக்கு நட்டம் ஏற்படவில்லை. |
| (ஆ) | ஓபல்கல குடிநீர் வினியோகத் திட்ட நிர்மாணம்<br>------------------------------<br>பெறுகை வழிகாட்டல் கையேட்டின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு முற்பணக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளாமல் ஓபல்கல குடிநீர் வினியோகத் திட்டத்தை நிர்மாணித்த ஒப்பந்ததார சங்கத்துக்கு ரூபா 194,800 தொகை முற்பணமாக 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததோடு, அவ் செயற்திட்ட நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. உரிய முற்பணத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளாததோடு, அது கணக்கிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சட்ட திட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பதோடு, முற்பணத்தைப் பெற்றுக் கொள்ளவும், கணக்குகளை வெளிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வருங்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |